பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா.செழியன் எம்.ஏ.எம்.பி.

மலர்: 20] சென்னை: புரட்டாசி 7 (23—9—72) சனி

வெளியூர்: புரட்டாசி 8 (24—9—72) ஞாயிறு [இதழ்: 85

கண் சிகிச்சைப் பணிக்கு அமெரிக்க மானியம்

மதுரை மருத்துவக் கல்லூரிக்கு வழங்கப்படுகிறது

புதுடில்லி, செப். 23—

மதுரை மருத்துவக் கல்லூரி புதிதாக மேற்கொண்டிருக்கும் கிராமப்புறக் கண் சிகிச்சைப் பணிகளுக்கு அமெரிக்க அரசு ரூ. 3,70,000 மானிய உதவி வழங்கியிருக்கிறது.

ஒரிசாவில் மற்றொரு புயல்

★

பத்து நாளில் இரண்டாம் முறையாக இயற்கையின் கோரம்

புவனேசுவரம், செப். 23—

ஒரிசாவின் தென் பகுதிக் கரையோரத்தை நேற்று மீண்டும் ஒரு கடும் புயல் தாக்கியிருக்கிறது.

கடந்த 10-ந் தேதிதான் ஒரு பயங்கரப் புயல் காரணமாக ஒரிசாவில் நூற்றுக்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர்; ஏராளமான பொருட் சேதமும் ஏற்பட்டது; அந்தச் சேத விவரங்களைக் கணக்கிடுமுன்னர் இப்போது மீண்டும் புயல் அடித்திருக்கிறது.

இதனால், மின்சார—செய்திப் போக்குவரத்துக்கள் பல இடங்களிலும் பாதிக்கப்பட்டன; மணிக்கு சுமார் 100 மைல் வேகத்தில் புயல் அடித்திருக்கிறது; பல இடங்களிலும் பெரும் அளவு பயிர்களுக்கு நாசம் ஏற்பட்டிருக்கும் எனக் கருதப்படுகிறது.

இதுவரை உயிர்ச் சேதம் பற்றிய தகவல் ஏதும் தெரியவில்லை; இரயில் தண்டவாளங்கள் அனைத்தும் நீரில் அமிழ்ந்து கிடக்கின்றன; இதனால் இரயில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

சர்க்கரை — அரிசி ஆலைகள்

ம. பி. மாநிலத்தில் அரசுடைமையாகும்

ஜெய்ப்பூர், செப். 23—

"மத்தியப் பிரதேசத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளையும் — அரிசி ஆலைகளையும் அரசுடைமையாக்குவது குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்துவருகிறது" என்று, கூட்டுறவுத் துறை அமைச்சர் உம்ரோ சிங் தெரிவித்தார்.

ஆயினும் அவை தேசியமயமாக்கப்படுவதற்குமுன், முறையாகவும் — ஒழுங்காகவும் இயங்குகின்றனவா என்பதை அரசு உறுதி செய்யும்" என்றும் அவர் தெரிவித்தார்.

லைசென்சுகள் பெற்ற புதிய தொழில் நிறுவனங்கள்

புதுடில்லி, செப். 23—

நடப்பு ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மத்தியத் தொழில் வளர்ச்சி அமைச்சகம் 224 தொழில் நிறுவனங்களுக்கு லைசென்சுகள் வழங்கியிருக்கிறது; இவற்றில் 61 லைசென்சுகள் புதிய தொழில் நிறுவனங்களுக்கும், 56 லைசென்சுகள் ஏற்கனவே உள்ளனவற்றின் விரிவுக்காகவும் அளிக்கப்பட்டனவை யாகும்.

இந்திவெறியின் உச்சநிலை

பீகார் சட்டப் பேரவையில் கூச்சல் — குழப்பம்

சோஷலிஸ்டு உறுப்பினர் காவலர்மூலம் வெளியேற்றப்பட்டார்

பாட்னா, செப். 23—

கூச்சலும் — குழப்பமும் ஏற்பட்டதன் காரணமாகப் பீகார் சட்டப் பேரவையை நேற்று ஒத்திவைக்கவேண்டியதாயிற்று.

"பள்ளிப் படிப்பு இறுதியாண்டு வரையில் ஆங்கிலத்தைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும்" என்று முதலமைச்சர் ஒரு மசோதா கொண்டுவந்ததைத் தொடர்ந்து இந்தக் குழப்பம் துவங்கியது.

சோஷலிஸ்டுக் கட்சி உறுப்பினர் சச்சிதானந்த சிங் என்பவர், இந்த மசோதாமீது ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்ப முயன்றார்; தலைமைவகித்த அவைத் தலைவர், அந்த உறுப்பினரிடம், தமது கண்டனத்தை எழுத்துமூலம் தருமாறும் — இருக்கையில் அமருமாறும் பலமுறை கேட்டுக் கொண்டார்; ஆயினும், அந்த சோஷலிஸ்டு உறுப்பினர் அவைத் தலைவரின் கட்டளையைப் புறக்கணித்தும் பேசிக்கொண்டே இருந்தார்; உடன் அவைக் காவலர்கள் அழைக்கப்பட்டு — வலுக்கட்டாயமாக அந்த உறுப்பினர் வெளியேற்றப்பட்டார்.

இதை எதிர்த்து எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அவையிலேயே குரல் எழுப்பிக் கொண்டிருந்தனர்; 'ஆங்கிலத்துக்கு இங்கு வேலை இல்லை; இந்த நாடு மீண்டும் அடிமையாகுவதற்கு அனுமதிக்கமாட்டோம்' என்று முழக்கமிட்டனர்; இதைத் தொடர்ந்து அவை ஒத்திவைக்கப்பட்டது.

வங்கதேச அங்கீகாரம் — பூட்டோவின் பிடிவாதம் தளருமா?

இராணுவக் கைதிகளின் மனைவியர் வற்புறுத்தல்

பாகிஸ்தான் பத்திரிகைகளும் குரல் எழுப்புகின்றன

புதுடில்லி, செப். 23—

இந்தியாவில் சிறைப்பட்டிருக்கும் பாகிஸ்தான் இராணுவத்தினரின் மனைவிமார்களும் — உறவினர்களும், வங்கதேசத்தை உடனே அங்கீகரிக்குமாறு அதிபர் பூட்டோவை வற்புறுத்திக்கொண்டு வருகின்றனர்.

"வங்க தேசத்தை அங்கீகரித்தால்தான் சிறைப்பட்டிருக்கும் இராணுவத்தினர் நாடு திரும்ப முடியும்" என்ற நிலை இருந்து வருவதால், அவர்கள் அப்படி வற்புறுத்துகின்றனர்.

ஒவ்வொரு நாளும் பாகிஸ்தான் பத்திரிகைகளில் ஏராளமான கடிதங்கள் வெளியாகிக் கொண்டு வருகின்றன; 'இன்னும் எவ்வளவு நாட்களுக்குத்தான் நாங்கள் இந்தக் கொடுமையைத் தாங்கிக்கொண்டு வருவது' என்று அவர்கள், இந்தக் கடிதங்களின் மூலம் தங்கள் மனக் குமுறலைகளை வெளிப்படுத்துகின்றனர்.

பாதுகாப்புச் செலவு குறையாதாம்

பூட்டோவின் வீராப்பு

வளர்ச்சித் திட்டங்களுக்கு வக்கில்லாமல் திணறல்

புதுடில்லி, செப். 23—

"இந்தியாவுடன் முறையானதும் — இறுதியானதுமான ஓர் ஒப்பந்தம் ஏற்படும்வரையில், பாகிஸ்தான், தனது பாதுகாப்புச் செலவைக் குறைக்க முன்வராது" என்று, பாகிஸ்தான் தலைவர் பூட்டோ தெரிவித்திருக்கிறார்; அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

"இந்தப் பாதுகாப்புச் செலவுடன், வளர்ச்சித் திட்டங்களையும் எப்படி மேற்கொள்ளுவது என்பது பாகிஸ்தானுக்குச் சிக்கலான ஒரு பிரச்சனையாகவே இருக்கிறது.

தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் முயற்சிகளின் காரணமாகப் புதிய சூழ்நிலை உருவாகும்போது, பாதுகாப்புச் செலவைக் குறைப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும்."

கன்னியாகுமரியில் கடும் மழை

கடல் அலைகளுக்கு 36 வீடுகள் இலக்கு

நாகர்கோயில், செப். 22—

நேற்று நாகர்கோயிலில் பல கரையோரப் பகுதிகளிலும் கடல் அலைகள் வந்து தாக்கியதன் காரணமாக 36 வீடுகள் கடல் நீரால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டதாகச் செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

அந்தப் பகுதியில் கடும் மழையும் பெய்து வருகிறது.

இன்று காலையுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் 145 மில்லி மீட்டர் மழை பெய்திருக்கிறது; அண்மைக் காலத்தில் இந்த அளவு மழை பெய்ததில்லை என்று கூறப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தின் நீர் நிலைகள் எல்லாம் நிரம்பிக் கொண்டு வருகின்றன.

சென்னையில் கண் சிகிச்சை முகாம்

இந்த ஆண்டில் பத்தாயிரம்பேர் கண்ணொளி பெறுவர்

★

காந்தி பிறந்தநாளை யொட்டி சென்னை மாநகராட்சி ஏற்பாடு

சென்னை, செப். 23—

சென்னை நகரில் இந்த ஆண்டு பத்தாயிரம் பேருக்குக் கண் சிகிச்சை அளிக்க சென்னை மாநகராட்சி மன்றம் திட்டமிட்டுச் செயல்படவிருக்கிறது.

இந்தக் கண் சிகிச்சை முகாம் அக்டோபர் 25 முதல் நவம்பர் 5 வரையில் நுங்கம்பாக்கம் உயர்நிலைப் பள்ளியிலும் — அசோக் விகாரிலும் நடத்தப்படும்.

விடுதலை வெள்ளி விழா ஆண்டின் காந்தி பிறந்த நாள் விழாவையொட்டி சென்னை மாநகராட்சி இந்தக் கண் சிகிச்சை முகாமை நடத்த முடிவு செய்துள்ளது.

இது குறித்து மாநகராட்சி ஆணையாளர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:—

'காந்தியார் பிறந்த நாள் விழா அக். 2-ந் தேதி முதல் 9-ந் தேதிவரை ஒரு வார காலம் நடைபெறும்.

இந்த ஒரு வார விழாவில், நகரில் குடிசைப் பகுதிகளை மேம்படுத்தல் — மரம் நடுதல் — துப்புரவு இயக்கம் நடத்தல் போன்ற நற்பணிகள் மேற்கொள்ளப்படும்.

துப்புரவு இயக்கம்

அக். 14-ம் நாள் நடமாடும் துப்புரவுப் படையைக் கல்வி அமைச்சர் நாவலர் துவக்கி வைப்பார்.

இந்தத் துப்புரவுப் படையில் மூன்று லாரிகள் இருக்கும்; மிருகக் காட்சிசாலைக்கு அருகில் இந்த லாரிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும்.

ஒவ்வொரு லாரியிலும் டிரைவரும் — ஏழு துப்புரவுத் தொழிலாளர்களும் தயாராக இருப்பார்கள்; காலை 10-30 மணி முதல் பிற்பகல் 2-30 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் இரவு 10 மணிவரையிலும் துப்புரவுப் படை தயாராக இருக்கும்.

நகரில் எந்தப் பகுதியிலாவது இவர்களது பணி தேவைப்பட்டால், தொலைபேசி மூலம் தெரிவித்தால் இந்தப் படையினர் விரைந்து சென்று அப்பணியினை மேற்கொள்வர்.

மரம் நடும் விழா

அக்டோபர் 5-ம் நாள் காலை முத்துசாமி சாலையில் மரம் நடும் விழா நடைபெறும்; மரக் கன்றுகளை அமைச்சர் நாவலர் நடுவார்.

நண்பகல் உணவு வண்டிகள்

மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்குவதற்காக அமெரிக்கக் கத்தோலிக்க மாநாட்டினர் நான்கு வண்டிகளை (வேன்) வழங்கியுள்ளனர்; இதன் மதிப்பு ரூ. 1,70,000.

இந்த வேன்களை அமைச்சர் நாவலர் மாநகராட்சி சார்பில் பெற்றுக்கொள்வார்.

இலவசக் கண் சிகிச்சை

காந்தி பிறந்த நாள் விழாவையொட்டி இலவசக் கண் சிகிச்சை முகாம் அக்டோபர் 20 முதல் நவம்பர் 5-ம் நாள் வரை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது; இதில் 500 பேருக்கு இலவசக் கண் சிகிச்சை அளிக்கப்படும்; இந்த ஆண்டுக்குள் 10,000 பேருக்கு இலவசக் கண் சிகிச்சை அளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.'

நம் நாடு

ஆசிரியர்: இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 2003 புரட்டாசி 7 (23—9—72) சனி

பாராட்டு--நன்றி!

இந்த நூற்றாண்டின் ஈடு இணையற்ற மேதையும்--நம்மையெல்லாம் ஆளாக்கி வழிகாட்டிய ஒப்பற்ற தலைவருமான பேரறிஞர் அண்ணா அவர்கட்குக் கடந்த பதினைந்தாம் நாள் முதல் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் விழா எடுத்துக் கொண்டாடப்பட்டு வருகிறது.

கழகத் தலைவர் கலைஞரும்--பொதுச்செயலாளர் நாவலரும் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, செப்டம்பர் 15 முதல் அண்ணா பிறந்த நாள் விழாவினை நமது கழகத்தவரும்--ஆதரவாளர்களும் ஆங்காங்கு சிறப்பான முறையில் கொண்டாடி வருகின்றனர்.

தமிழகத்தின் பட்டிதொட்டியெல்லாம் நாள்தோறும் விழா நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன; தமிழகத்தில் மட்டுமன்றி இந்தியத் தலைநகரான டில்லியிலும், பம்பாய்- கல்கத்தா போன்ற பிறமாநிலத் தலைநகரங்களிலும் விழாக் கொண்டாடப்பட்டிருக்கிறது.

தமிழகத் தலைநகரான சென்னையில் சென்ற வாரம் நடைபெற்ற பிரமாண்டமான ஊர்வலமும் --பொதுக்கூட்டமும் உள்ளபடியே வரலாற்றுச் சிறப்பு மிக்கவையாகும்; எழுச்சியும் உணர்ச்சியும் பொங்கி வழிந்த எழிலார்ந்த அந்த ஊர்வலம், அண்ணன் உயிருடன் இருந்தால் எப்படி நடக்குமோ அந்த அளவுக்கு உற்சாகத்துடன் நடத்தப்பட்டது.

இதேபோல் மாநிலமெங்கும் நமது கழகத் தோழர்கள், உற்சாகம் பொங்க அண்ணனின் புகழ் பாடி--விழா எடுத்து மகிழ்ந்திருக்கின்றனர்.

ஆண்டுக்கு ஆண்டு நாம் கொண்டாடும் இவ்விழா, அண்ணனின் புகழை அவனியெல்லாம் பரப்பத் துணை புரியும் என்பதுடன்-- அண்ணனின் அறநெறியை நமது நாட்டு அரசியலில் வளர்க்கவும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

இளந்தலைமுறையினருக்கு அண்ணாவின் இலட்சியங்களையும்--அவற்றை அடைய அண்ணா மேற்கொண்ட வழிமுறைகளையும் எடுத்துச் சொல்லி, அண்ணா கண்ட கனவை நனவாக்க -- ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க வழிகோல வேண்டியது இந்தத் தலைமுறையினரின் நீங்காக் கடமையாக அமைய வேண்டும்.

இதற்காக மட்டுமன்றி, இந்த நாடு அண்ணனுக்குக் காட்டும் நன்றியுணர்வை வெளிப்படுத்திக்கொள்ளும் வகையிலும் இவ்விழாவினைச் சீரும் சிறப்புமுற நாம் கொண்டாடி வருகிறோம்.

இந்த நாட்டில் எத்தனையோ தலைவர்கள்--பெரிய மனிதர்கள் தோன்றி மறைந்திருக்கின்றனர்; எனினும், பேரறிஞர் அண்ணா தனிப் பெருந் தலைவர் ஆவார்; 'இல்லஸ்ட்ரேட்டடு வீக்லி' ஆசிரியர் குறிப்பிட்டதைப்போல், தமிழ்மக்கள் எங்கெங்கு உள்ளனரோ அவர்கள் உள்ளத்திலெல்லாம் குடிகொண்ட ஏகச்சக்கிராதிபதியாவார் -- நமது அண்ணன்!

நம் இதயத்தில் என்றும் குடிகொண்டுள்ள அண்ணன்; மறைந்தும் மறையாதவராய் -- தோன்றாத் துணையாக நின்று நமக்கு இன்றும் வழிகாட்டிக்கொண்டுதான் இருக்கிறார்; அவர் வழி நின்று நமக்குத் தலைமைதாங்கி வழிநடத்திச்செல்லக் கலைஞர் அவர்கள் இருக்கின்றார்; கழகத் தலைவர் இட்ட ஆணையே அண்ணாவின் ஆணை' என்று கொண்டு, அண்ணாவின் இலட்சியங்களை அடைய நாம் முன்னிலும் பன்மடங்கு ஆர்வத்துடன் பணியாற்ற வேண்டும்.

ஆண்டுக்கு ஒருமுறை விழாக் கொண்டாடுவதுடன் அண்ணனுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமை முடிந்துவிடவில்லை; அண்ணா தோற்றுவித்த கழகத்தைக் கட்டிக் காக்கவும்-- அவர் அமைத்த கழக அரசைக் காக்கவும் நாம் உறுதி பூண வேண்டும், எதிரிகளின் சதித் திட்டங்களையெல்லாம் முறியடித்து இலட்சிய வெற்றியை நாம் எய்த வேண்டும்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் உயரிய இலட்சியத்தை இதயத்தில் ஏந்தி -- அண்ணா வழியில் அயராது பணியாற்றவும், 'மாநிலத்தில் சுயாட்சி--மத்தியில் கூட்டாட்சி' காணவும், இந்தித் திணிப்பை என்றும் எதிர்த்து நிற்கவும் நமக்கு ஆண்டு முழுவதும் வேலை இருக்கிறது.

"பசி நோக்காது -- கண் துஞ்சாது -- கருமமே கண்ணாயிருப்பவர்கள் அண்ணாவின் தம்பிகளான கழகக் காளையர்கள்' என்று மாற்றுக் கட்சியினராலும் பாராட்டப்பட்டவர்கள் நாம்!

அத்தகைய தொண்டர்கள், கழகத்தில்தான் இன்னும் இருக்கிறார்கள் என்பதை எதிரிகள் உணர்ந்துகொள்ள வேண்டும்; அதற்குரிய முறையில் நமது பணிகள் அமையவேண்டும்.

விழாக்கொண்டாடிய மாவட்ட -- வட்ட,-நகர--பேரூர்--சிற்றூர்க் கழகக் கிளைகள், சார்பு மன்றங்கள் ஆகிய அத்தனை அமைப்புகளையும் பாராட்டுகிறோம்; விழா நிகழ்ச்சிகளில் பங்கேற்ற தோழமைக் கட்சியினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்."

மக்கட் தொகைப் பெருக்கத்தால் ஏற்படும் விளைவுகள்

ஐ. நா. செயலாளர் அபாய அறிவிப்பு

நியூயார்க், செப். 23—

உலக மக்கட் தொகையானது 1940-ல் இருந்ததை விட ஒவ்வோர் ஆண்டும் இரட்டிப்பாகிவருகிறது, ஒவ்வோர் ஆண்டும் 1 270 இலட்சம் குழந்தைகள் பிறக்கின்றன; 950 இலட்சம் குழந்தைகள் பள்ளி செல்லும் பருவத்தை அடைகின்றன; 190 இலட்சம் பேர் 15 வயதை அடைகிறார்கள்.

"1974-ம் ஆண்டு, 'மக்கட் தொகை ஆண்டு' ஆக இருக்கும்; இவ்வாண்டில் இப்பிரச்சினை குறித்து ஒரு மாநாடு நடக்கும்"

என்று ஐ.நா. செயலாளர் தரிசி வால்டம் அறிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"இந்த 'மக்கட் தொகை ஆண்டி'ன் நோக்கத்தை மக்களுக்கு உணர்த்த உலகிலுள்ள அரசுகள் எல்லாம் தீவிரத் திட்டங்கள் வகுத்து -- மக்கட் தொகைப் பெருக்கத்தைத் தடுக்கக் கண்கூடான -- திட்டவட்டமான திட்டங்கள் வகுக்க வேண்டும்.

உலகை எதிர்நோக்கியுள்ள பொருளாதார வளர்ச்சி -- நீர், காற்று போன்றவற்றில் ஏற்படும் நச்சுக் கலப்பு -- மனித வாழ்வின் மேம்பாடு -- படைபலக் குறைப்பு ஆகிய மாபெரும் பிரச்சினைகளுக்கெல்லாம் இந்த மக்கட் தொகைப் பெருக்கம்தான் திறவுகோலாகும்.

மக்கட் தொகைப் பெருக்கமானது, கல்வி வேலை -- வாய்ப்பு குறைவாக உள்ள--முன்னேற்றம் அடைந்து வரும் நாடுகளை மட்டும்தான் பாதிக்கிறது என்பதில்லை; நகர்களில் நெரிசல் காரணமாகத் தொழில் வளம் படைத்த நாடுகளின் முன்னேற்றத்தையும் தாறுமாறாக்கிவிடுகிறது.

அறநிலைய அமைச்சர்

மு. கண்ணப்பன்

நிகழ்ச்சிகள்

செப். 23 பிற்பகல் 3 30 மணி: கோவை—மாநில சிறைச்சாலை அலுவலர்கள் ஆண்டு விளையாட்டுப் போட்டி விழாவில் தலைமை தாங்குதல்.

செப். 24: முதலமைச்சர் கலந்துகொள்ளும் கோவை மாவட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்றல்.

செப். 25 காலை 10 மணி: நார்த்தமலை சாலை -- வளைவு திறப்பு விழா; 11 மணி: புதுக்கோட்டை; மாலை 4-30 மணி: ஆலங்குடி -- நாமபுரீசுவரர் திருக்கோயில் திருமண மண்டபம் திறப்பு; இரவு 9-30 மணி: திண்டுக்கல் காந்தி திடலில் 'ஏன் சிரித்தான்' நாடகத் துவக்கம்.

புதுவை மாவட்ட தி.மு.க.

தவறான செய்திக்கு மறுப்பு

புதுவை, செப். 22—

புதுவை மாவட்ட தி.மு.க. செயலாளர் திரு. எம். ஏ. சண்முகம் அவர்கள் அறிவிப்பதாவது:—

"நில உச்சவரம்பு சம்பந்தமாகவும், நகர்ப்புறச் சொத்துடைமை குறித்தும், 'புதுவை மாவட்ட தி.மு. கழகத்தின் கருத்து' என்ற பெயரால் சில பத்திரிகைகளில் வெளியாகியுள்ள செய்தி என் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது; அத்துடன், 'தமிழர் படை' பற்றியும் ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

நில உச்சவரம்பு குறித்தும், நகர்ப்புற நிலவுடைமை குறித்தும் தலைமைக் கழகம் எந்தக் கொள்கையைக் கொண்டுள்ளதோ -- அதுதான் புதுவை மாவட்டக் கழகத்தின் கொள்கையும் ஆகும்; புதுவை மாவட்டக் கழகத்துக்கென்று தனிக் கொள்கை எதுவும் கிடையாது.

இத்தொடர்பில் மாவட்ட தி. மு. கழகம் எந்தவிதப் புதிய முடிவையும் மேற்கொள்ளவில்லை; மாவட்டக் குழுக் கூட்டமே நடைபெறவில்லை; மாவட்டக் கழகத்துடன் தொடர்புபடுத்தி இத்தகைய செய்தி ஒன்றினைப் பொறுப்பின்றிப் பத்திரிகைகட்கு விடுத்தவர்கள்மீது புதுவை மாவட்ட தி. மு. கழகம் தக்க நடவடிக்கைகள் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழர் படை என்பதாக ஒன்று புதுவையில் இல்லை என்பதையும் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்."

கலைஞர்கட்கு உதவி நிதி

புதுடில்லி, செப். 23 —

"ஐந்தாவது திட்ட காலத்தில், அங்கீகரிக்கப்பட்ட கலைஞர்களுக்கு ஆயுள் முழுவதும் உதவிப் பணம் தருவதற்கான திட்டம் ஒன்றை மத்திய அரசின் பண்பாட்டுத் துறை வகுத்து வருகிறது" என்று அதிகார வட்டாரங்கள் கூறின.

கலைஞர்களுக்கு அதிக அளவு சுயமாக வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள வகைசெய்ய மற்றொரு திட்டம் உருவாகிறது; இவ்விரு திட்டங்களுக்காகவும் மத்திய -- மாநில மட்டங்களில் அரசுக்கு ரூ. 3 கோடி செலவாகும்.

அடுத்த திட்ட காலத்தில் ரூ. 290 கோடி செலவில் செயல்படுத்த எண்ணியுள்ள தேசிய பண்பாட்டுத் திட்டத்தில் இவை இடம் பெற்றுள்ளன.

தென்னிந்தியாவில் ஒன்றும், வட இந்தியாவில் ஒன்றுமாக ரூ 12 கோடி செலவில் இரு தேசிய கலைப் பள்ளிகளைத் துவக்கவும் அரசு எண்ணியுள்ளதாம்.

சிறு தொழில் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டியதென்ன?

புதுடில்லி மாநாட்டில் அமைச்சர் செ. மாதவனின் அரிய யோசனைகள்

புதுடில்லி, செப். 22—

"சிறு தொழில்களுக்கு வருமான வரியிலிருந்து ஐந்தாண்டுக் காலத்துக்கு விலக்கு அளிக்க வேண்டும்; அல்லது இந்த ஐந்தாண்டுகளில் சிறு தொழில் நடத்துவோர் செலுத்தியிருக்க வேண்டிய வருமான வரியை அவர்களுக்கு 18 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்திவிடக் கூடிய கடனாக வழங்கிடலாம். மத்திய அரசு இதைப் பரிசீலித்துப் புதிய கொள்கை ஒன்றை வகுக்க வேண்டும்.

"சிறு தொழில்களின் தேவைக்கென்று அந்நியச் செலாவணி தனியே ஒதுக்க வேண்டும்; மாநிலங்களில் உள்ள சிறு தொழில் அமைப்புக்களுக்கான நிறுவனங்கள் சிறு தொழில்களுக்கு அவசியப்படுகின்ற ஆலோசனைகளைக் கூறி உதவிடத்தக்க வகையில் விரிவாக்கப்பட வேண்டும்.

"தேசிய சிறு தொழில் கார்ப்பரேஷன் வழங்குகின்ற கடன்கள், மாநில அரசுகளின் மூலமே சிறு தொழில்களுக்கு வழங்கப்பட வேண்டும்; இவ்வாறு செய்வதால், மாநில உதவிகள் கிடைக்கப்பெற்ற ஒருவருக்கே மத்திய உதவியும் கிடைக்கிற நிலையைத் தவிர்க்கலாம்"

என்று தமிழ்நாடு தொழிலமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள், டில்லியில் நடந்த அனைத்திந்திய சிறு தொழில்கள் வாரிய மாநாட்டில் பேசுகையில் வற்புறுத்தினர்; அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:—

"சிறு தொழில்கள் மூலம் உற்பத்தியாகின்ற பொருள்கள் ஓரளவுக்கு விலைகூடுதலாகத் தெரிந்தாலும், மத்திய அரசின் பல்வேறு துறையினரும்--மத்திய தொழில் நிறுவனங்களும் அப்பொருள்களையே வாங்குமாறு கூற மாநிலத்துக்கு ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும்.

மேலும், சிறு தொழில்களை நடத்துவோருக்கு ஏற்படுகின்ற சிரமங்களையும் -- தொல்லைகளையும் அறிந்து அவற்றைத் தீர்த்து வைக்கவும் மாநிலத்துக்கு ஒரு குழுவை மத்திய அரசினர் நியமிக்க வேண்டும்.

சிறு தொழில் தொடங்க முன்வருகின்றவர்களுக்கு - அவர்கள் தொடங்கும் தொழிலின் தொழில் நுணுக்க இயந்திர மூலதனம் மற்றும் மூலப் பொருள் தேவைகள் இன்னின்னவை என்று எடுத்துக்கூறவும், அத்தொழிலின் மூலம் உற்பத்தியாகின்ற பொருட்களுக்குக் கிடைக்கக் கூடிய விற்பனை வாய்ப்புக்கள் இன்னின்னவை என்றும் எடுத்து விளக்கிட மாநில அரசுடன் கலந்துகொண்டு தொழில் நுணுக்கப்பிரிவு ஒன்றும் அமைக்கப்பட வேண்டும்.

இந்தத் தொழில் நுணுக்கப் பிரிவு கூறுகின்ற யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டுடைமையான வங்கிகளும் இதர நிதி நிறுவனங்களும் இந்தச் சிறு தொழில்களுக்கு நிதியுதவி அளிக்கலாம்; சிறு தொழில்களுக்கு வட்டி விகிதங்களும் குறைவாகவே இருக்க வேண்டும்.

அப்படிக் குறைந்த வட்டிக்கு நிதி வழங்குவதால் வட்டி வருவாயில் ஏற்படும் நட்டத்தை மத்திய— மாநில அரசுகள் ஈடு செய்யலாம்.

இப்படிச் சிறு தொழில்களுக்கு வழங்கும் கடன்களைத் தொழில் தொடங்கிய ஐந்தாண்டுக்கள் கழித்த பின்னரே திரும்ப வசூலிக்கத் தொடங்க வேண்டுமென்றும், பாக்கியைச் செலுத்த நீண்ட காலத் தவணை அளிக்க வேண்டுமென்றும் நாட்டுடைமையான வங்கிகளுக்கு மத்திய அரசு உத்தரவிட வேண்டும்.

மூலப் பொருள்கள் கிடைப்பதும் சிறு தொழில்களுக்கு ஓர் அடிப்படைப் பிரச்சினையாக இருந்து வருகின்றது; தற்போது மூலப் பொருட்களை விநியோகிக்கப் பல்வேறு அமைப்புக்கள் இருந்து வருகின்றன; மாநிலத்துக்கு ஒரு விநியோக அமைப்பை மத்திய அரசு ஏற்படுத்தலாம்; அல்லது, எல்லா வகைத் தொழில்களுக்கும் மூலப் பொருள் விநியோகத்துக்கு மாநில அரசே ஒரு அமைப்பை நடத்தலாம்; இவ்வாறு செய்வதால், ஒரு குறிப்பிட்ட சிறு தொழிலின் மூலப் பொருள் தேவை இவ்வளவு என்று தெரிந்துகொள்ள உதவும்; மேலும் மூலப் பொருள்களின் பிரச்சினையில் தவறுகள் நடக்காமல் தடுக்கலாம்."

சிறைகளில் நெரிசல்

தவிர்க்கப் புதிய திட்டம்

புதுடில்லி, செப். 22—

சிறைகளில் இடநெருக்கடி ஏற்பட்டிருப்பதைச் சமாளிக்க மத்திய அரசு புதிய சட்டம் கொண்டு வருகிறது.

இதன்படி, கைதிகள் விசாரணையின்போது காவலில் இருக்கும் நாட்களும் அவர்கள் தண்டனைக் காலத்துடன் சேர்த்துக் கணக்கிடப்படும்; இதனால், காவலில் அதிக நாட்கள் இருந்த கைதிகளின் தண்டனைக் காலம் சிறிது குறையும்.

சாதாரணமான குற்றங்களுக்கு இப்பொழுது 2 அல்லது 3 மாத சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது; இனிமேல் இதுபோன்ற வழக்குகளில் சிறைத் தண்டனைக்குப் பதிலாக அபராதம் விதிக்கப்படும்.

மத்திய அரசின் இந்த யோசனைகள் பரிசீலனையில் இருக்கின்றன; இது குறித்து விரைவில் முடிவு எடுக்கப்படும்.

கிண்டி குதிரைப் பந்தயத்தில் 'புக்கி'களிடம் பணம் கட்டும் முறை ஒழிக்கப்பட்டுவிடும்

அமைச்சரவை முடிவு-முதல்வர் விளக்கம்

சென்னை, செப். 23—

கிண்டியில் நடைபெறும் குதிரைப் பந்தயங்களில் இதுவரையில் நடைமுறையில் இருந்துவந்த -- புக்கி'களிடம் பணம் கட்டும் முறையை ஒழித்துவிடுவதெனத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

குதிரைப் பந்தய மைதானத்திற்குள், லைசென்சு பெற்ற தனி நபர்கள் சிலர், பந்தயத்தில் ஓடும் குதிரைகள்மீது ரசிகர்களிடம் பணம் வாங்கிக்கொண்டு -- வெற்றி பெற்ற குதிரைகள்மீது பந்தயம் கட்டியவர்கட்குப் பலமடங்கு பணம் கொடுப்பது உண்டு; இவர்களுக்குத்தான் 'புக்கி'கள் என்று பெயர்.

அமைச்சரவைக் கூட்டம், நேற்று முதலமைச்சர் தலைமையில் நடைபெற்றது; கூட்ட முடிவில் செய்தியாளர்களிடம் முதலமைச்சர் கூறியதாவது:—

"சென்னை—கிண்டியில் நடைபெறும் குதிரைப் பந்தயத்தில் 'புக்கீ'ஸ் முறை உடனடியாக ஒழிக்கப்படும்; நடைபெறவிருக்கும் குதிரைப் பந்தயத் தொடரிலிருந்து இந்த முறை ஒழிக்கப்படும்; இதுபற்றி ஏற்கனவே முடிவெடுக்கப்பட்டு இருந்தது; இப்போது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

"இந்த 'புக்கீ'ஸ் முறைக்கு மாற்று முறைகளைக் குதிரைப் பந்தயச் சங்கத்தினர் தெரிவித்திருந்தனர்; அவற்றை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

"இந்த 'புக்கீ'ஸ் முறையை ஒழிப்பதற்குக் காரணம் இதில் நிறைய ஒழுங்கீனங்கள் இருப்பதாகவும் -- அதன் மூலம் அரசுக்குக் கிடைக்க வேண்டிய வரிகளில் தவறுகள் நடைபெறுவதாகவும் -- அத்துடன் பல்வேறு குறைபாடுகள் இருப்பதாகவும் சொல்லப்பட்டது; அதன்பேரில் இம்முறை உடனடியாக நீக்கப்படுகிறது.

"இதை ஒழிப்பதால், அதற்கு மேலும் வேறு தவறுகள் ஏற்படாமல் இருக்கப் போலீசார் மிகத் தீவிரமாகக் கண்காணிப்பார்கள்."

கேள்வி:—"அப்படியானால் குதிரைப் பந்தயத்தை தேசியமயமாக்குவதற்கு இது முதல் கட்டமா?"

முதலமைச்சர்:—"எல்லாம் செம்மையாக நடப்பதற்கு இது ஒரு கட்டம்."

கேள்வி:—"குதிரைப் பந்தயம் தேசியமயமாக்கப்படுமா?"

முதலமைச்சர்:— "இப்போது அப்படி எதுவும் யோசிக்கப்படவில்லை."

கேள்வி:—"குதிரைப் பந்தய நிர்வாகக் குழுவில் அரசுப் பிரதிநிதிகளாக 2 பேரை நியமிக்கப் போவதாக முன்பு கூறினீர்களே -- அவர்கள் ஒப்புக்கொண்டார்களா?"

முதலமைச்சர்:—"ஒப்புக்கொண்டது போலத்தான்."

விலைவாசி உயர்வு

நாடு முழுவதிலும் உள்ள நிலை

"இவ்வாண்டு துவக்கத்திலிருந்து பெரும்பாலான நகரங்களில் உணவுத் தானியங்கள்-- பருப்பு வகைகள் -- உணவுக்குப் பயன்படுத்தப்படும் எண்ணெய்கள் -- சர்க்கரை ஆகியவற்றின் விலைகள் மிகக் கடுமையாக உயர்ந்துள்ளன. இதன் விளைவாக மக்களின் வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ளது"

என்று, நாடு முழுவதும் நடத்திய ஒரு ஆய்விலிருந்து தெரிய வருகிறது.

அந்த ஆய்விலிருந்து தெரிய வந்துள்ள விவரங்கள் பின்வருமாறு:—

பெரும்பாலான நகரங்களில் அரிசி -- கோதுமை இவற்றின் விலைகள், சனவரியில் இருந்ததைவிட இப்போது 10-லிருந்து 30 சதவிகிதம் வரை கூடுதலாகி யிருக்கிறது; சர்க்கரை விலை இதைவிடக் கடுமையாக உயர்ந்துள்ளது; சில இடங்களில் 40 சதவிகிதமும் அதற்கும் மேலும்கூட அதிகரித்திருக்கிறது.

சில இடங்களில் மீன் இறைச்சி --காய்கறிகளின் விலைகள் ஏறுமுகமாக இருக்கின்றன; ஸ்ரீநகர்தான் இதற்கு விதிவிலக்கு; அங்கு மீன் -- இறைச்சி விலைகள் சனவரியை இப்போது குறைவாக இருக்கிறது.

சில நகரங்களில் மண்ணெண்ணெய் விலை ஏறியிருக்கிறது; துணிகளின் விலைகளில் பொதுவாக மாறுதல் இல்லை; ஆனால் ஒரு சில இடங்களில் மற்ற பண்டங்களின் விலை உயர்வால் துணி விலையும் சற்று உயர்ந்துள்ளது.

தஞ்சை சம்பாப் பயிரைக் காக்க....

காவிரியில் அதிகத் தண்ணீர் விடப்படும்

பயனுள்ள உதவி --- மைசூர் அரசுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் நன்றி

சென்னை, செப். 23—

'தஞ்சை மாவட்டத்தில் சம்பா பயிரைப் பாதுகாக்க மைசூர் மாநிலம் தண்ணீர் கொடுத்து உதவவேண்டும் -- என்ற தமிழக அரசின் கோரிக்கையை மைசூர் மாநில அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

"தமிழ்நாட்டின் கோரிக்கையை ஏற்று 350 கோடி கன அடி தண்ணீரைத் திறந்துவிட மைசூர் அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது" என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"நம்முடைய இப்போதைய அவசரத் தேவைக்கு அது பயனுள்ளதாக இருக்கும்; தகுந்த நேரத்தில் உதவிய மைசூர் அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்" என்றும் அவர் குறிப்பிட்டுக் கூறினர்.

"தமிழ்நாடு பொதுப்பணித் துறை அமைச்சர் எஸ். ஜே சாதிக் பாட்சா தலைமையில் சென்ற தூதுக் குழுவுக்கும் -- மைசூர் அரசுப் பிரதிநிதிகளுக்குமிடையே நடந்த பேச்சுவார்த்தைகளின்போது உடன்பாடு ஏற்பட்டது" என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

மைசூர் பொதுப்பணித் துறை அமைச்சர் எச் எம். சென்னபசப்பாவுக்கும் — தமிழ்நாடு பொதுப் பணித்துறை அமைச்சர் சாதிக் பாட்சாவுக்குமிடையே பெங்களூரில் நேற்று காலை 90 நிமிடநேரம் பேச்சுவார்த்தை நடந்தது.

மைசூர் முதல்வர் தகவல்

மைசூர் முதலமைச்சர் திரு. டி. தேவராஜ் அர்ஸ், இத்தொடர்பில் கூறியிருப்பதாவது:—

"தமிழ்நாட்டின் அவசரத் தேவைக்கு மைசூர் மேற்கண்ட அளவுக்குத் தண்ணீர்தர ஒப்புக் கொண்டிருக்கிறது.

"தமிழ்நாடு 600 கோடி கன அடி தண்ணீர் கேட்டது; ஆனால், கிருஷ்ணராஜ் சாகர் அணைக்கட்டில் நீர் மட்டம் அவ்வளவு திருப்தியாக இல்லாததால், இந்த அளவுதான் அளிக்க முடிந்தது; ஆனால் அதே சமயம் இன்னும் சில நாட்களில் மழை பெய்து -- அணைக்கட்டுக்கும் புதிதாகத் தண்ணீர் பாய்ந்து நிலைமை மேம்பாடு அடையுமானால் தமிழ்நாடு கேட்ட முழு அளவுத் தண்ணீரையும் அளிப்பது பற்றி மைசூர் பரிசீலனை செய்யப்படும்.

"இப்போது அளிக்கப்படும் தண்ணீர், மைசூர் அளிக்கவேண்டிய மொத்தக் கோட்டாவிலிருந்து நவம்பர் மத்தியில் பிடித்துக் கொள்ளப்படும்: நாளை அல்லது அதற்கு மறுநாள் தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் விடப்படும்."

பல்லவா போக்குவரத்துக் கழகம் லிமிடெட்

'போக்குவரத்து இல்லம்'
அண்ணா சாலை, சென்னை-2

ஒப்பந்தப் புள்ளி அறிக்கை

டயர்களைப் புதுப்பிக்கும் இயந்திரங்கள் (Tyre Retreading Machineries) சப்ளை செய்வதற்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு 21—10—72 பிற்பகல் 2 மணி வரை வந்து சேரும் வகையில் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த நிபந்தனை விவரங்கள் மற்றும் பிற விவரங்கள் அடங்கிய அறிக்கைகளை, 'சொள் முதல் அதிகாரி, பல்லவா போக்குவரத்துக் கழகம் லிமிடெட், சென்னை-2' என்ற முகவரியில் எந்த அலுவல் நாளிலும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

மெட்டீரியல்ஸ் நிர்வாகி,
பல்லவா போக்குவரத்துக் கழகம் லிமிடெட்,
சென்னை-2

சென்னை 34-ல் உள்ள இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறை ஆணையாளர் முன்பாக

மனு எண்: 324/72

நிர்வாகத் தர்மகர்த்தர்,
ஸ்ரீ பாலசுப்பிரமணியசாமி கோயில்
சோமாஸ்பாடி கிராமம்
திருவண்ணாமலை வட்டம்
வட ஆற்காடு மாவட்டம் —மனுதாரர்

வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலை வட்டம் சோமாஸ்பாடி கிராமம் ஸ்ரீ பாலசுப்பிரமணிய சாமி கோயில் விஷயமாக:—

வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலை வட்டம் சோமாஸ்பாடி கிராமம் ஸ்ரீ பாலசுப்பிரமணிய சாமி கோயிலுக்குச் சொந்தமாக திருவண்ணாமலை வட்டம் சோமாஸ்பாடி கிராமம் சித்தேரி பாசனம் உள்ள நன்செய் சர்வே எண் 77/21 ஏக்கர் 0 47 சென்ட் நிலத்தினைத் திருவண்ணாமலை ஆணைக்கட்டித் தெருவில் வசிக்கும் விநாயகசுந்தர முதலியார் மனைவி மதுராம்பா அம்மாளுக்குக் கொடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக மேற்படி மதுராம்பா அம்மாளுக்குச் சொந்தமாக மேற்படி சோமாஸ்பாடி கிராமத்தில் பெரிய ஏரியின்கீழ் உள்ள சர்வே எண் 116/6-ல் ஏக்கர் 0 53 சென்ட்டின் மத்தியில் உள்ள ஏக்கர் 0 28½ சென்ட்டும்--சர்வே எண் 111/4-ல் உள்ள 0 58 சென்ட்டில் 0 20½ சென்ட்டும் -- ஆகக் கூடுதல் 0-47 சென்ட் நிலத்தினைப் பரிவர்த்தனை செய்துகொள்ள அனுமதி வேண்டி 1959-ம் வருடத்திய இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 34-வது பிரிவின்கீழ் செய்துகொண்ட மனு:—

நோட்டீஸ் மனு எண் 324/72 டி. 1
நாள் 29—8—1972

மேற்படி மனு குறித்து சென்னை 34, நுங்கம்பாக்கம், நெடுஞ்சாலையிலுள்ள தமது அலுவலகத்தில், இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித்துறை ஆணையாளர் அவர்களால் 28—10—1972 அன்று காலை 11-மணியளவில் விசாரணை நடத்தப்படும்.

2. மேற்படி மனு குறித்து கருத்துரைகளோ, மறுப்புரைகளோ எவையேனும் இருப்பின் அவற்றை எழுத்துமூலமாக 25—10—1972 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ இந்த அலுவலகத்திற்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்க வேண்டும்.

3. முறையீடுகள் எவையேனும் இருப்பின் அவற்றை நேரிலும் விசாரணையின்போது தெரிவித்துக் கொள்ளலாம்.

கோ. நந்தகோபால்
ஆணையாளருக்காக

தமிழ்நாட்டில் காகிததொழிற்சாலை

சென்னை, செப். 23—

தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில் ஒரு காகித ஆலை நிறுவ மத்திய அரசு ரூ 9.75 கோடிக்கு அந்நியச் செலாவணி அனுமதித்திருக்கிறது.

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற ஒரு விழாவில் இதை அறிவித்த கூட்டுறவுத்துறை அமைச்சர் சி. பா. ஆதித்தனர், வெளிநாட்டிலிருந்து காகிதத் தொழிற்சாலைக்கான இயந்திரங்கள் வாங்க ஏற்பாடாகி வருகிறது என்றும் கூறினர்.

"காகித உற்பத்திக்குத் தேவையான மூங்கில் முதலிய மரங்களை வளர்க்கத் தமிழ்நாட்டின் வெப்பநிலை மிக ஏற்றதாக இருக்கிறது" என்று, அமைச்சர் மேலும் கூறினர்.

சென்னை 34-ல் உள்ள இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறை ஆணையாளர் முன்பாக

மனு எண் 300/72

தர்மகர்த்தா.
ஸ்ரீ காசி விஸ்வநாதசாமி கோயில்,
புத்தூர்,
திருச்சி மாவட்டம் —மனுதாரர்

திருச்சி மாவட்டம் திருச்சி வட்டம் புத்தூர் கிராமம் ஸ்ரீ காசி விஸ்வநாதஸ்வாமி கோயிலுக்குச் சொந்தமாகத் திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருச்சி வட்டம், திருச்சி முனிசிபாலிடி இராமலிங்கநகர் புத்தூர் வார்டு நெம்பர் 3 (பிளாக் எண் 24-ல்) டி. எஸ். எண் 1567-ல் ஏக்கர் 0.32 சென்ட், டி. எஸ். எண். 1552-ல் ஏக்கர் 0.03 சென்ட் ஆகக் கூடுதல் 0.34 சென்ட் சதுர அடி—14807-ல் 3035 சதுர அடி நிலத்தினை உறையூர் வீடு கட்டும் சங்கத்திற்குக் கொடுத்துவிட்டு—அதற்குப் பதிலாக மேற்படி சங்கத்திற்குச் சொந்தமாக டி. எஸ். எண். 1552/10-ல் உள்ள 750 சதுர அடி —டி.எஸ். எண். 1552/5-ல் 345 சதுர அடி—டி. எஸ். எண். 1564-ல் 1943 சதுர அடி ஆகக் கூடுதல் 3038 சதுர அடி நிலத்தினைப் பரிவர்த்தனை (exchange) செய்து கொள்ள அனுமதிவேண்டி 1959-ம் வருடத்திய இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 34-வது பிரிவின்கீழ் செய்துகொண்ட மனு:—

நோட்டீஸ் மனு எண் 300/72 டி. 1
நாள் 19—8—72

மேற்படி மனு குறித்து சென்னை 34, நுங்கம்பாக்கம், நெடுஞ்சாலையிலுள்ள தமது அலுவலகத்தில், இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித்துறை ஆணையாளர் அவர்களால் 28-10-1972 அன்று காலை 11 மணியளவில் விசாரணை நடத்தப்படும்.

2. மேற்படி மனு குறித்து கருத்துரைகளோ, மறுப்புரைகளோ எவையேனும் இருப்பின் அவற்றை எழுத்து மூலமாக 25—10—1972 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ இந்த அலுவலகத்திற்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்க வேண்டும்.

3. முறையீடுகள் எவையேனும் இருப்பின் அவற்றினை நேரிலும் விசாரணையின்போது தெரிவித்துக் கொள்ளலாம்.

கோ. நந்தகோபால்
ஆணையாளருக்காக

சென்னை 34-ல் உள்ள இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறை ஆணையாளர் முன்பாக

மனு எண்: 322/1972

நிர்வாக அலுவலகர்,
ஸ்ரீ அருணசலேஸ்வரர் கோயில்,
கிழையூர்,
நாகப்பட்டினம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம் —மனுதாரர்

தஞ்சாவூர் மாவட்டம் நாகப்பட்டினம் வட்டம் கீழையூர் கிராமம் ஸ்ரீ அருணசலேஸ்வரா கோயில் விஷயமாக:—

தஞ்சாவூர் மாவட்டம் நாகப்பட்டினம் வட்டம் கீழையூர் கிராமம் ஸ்ரீ அருணசலேஸ்வரா கோயிலுக்குச் சொந்தமாக நாகப்பட்டினம் வட்டம் கீழையூர் கிராமத்தில் சர்வே எண். 121/1-ல் உள்ள விஸ்தீரணம் ஏக்கர் 0 75 சென்ட் நிலத்தினை, மேற்படி கீழையூர் கிராமத்தில் வசிக்கும் திரு. எஸ் இராமையாத் தேவர் என்பவருக்குக் கொடுத்துவிட்டு -- அதற்குப் பதிலாக மேற்படி எஸ் இராமையாத் தேவருக்குச் சொந்தமாகக் கீழையூர் கிராமத்தில் சர்வே எண். 129/2-ல் உள்ள விஸ்தீரணம் ஏக்கர் 0-80 சென்ட் நிலத்தினை பரிவர்த்தனை செய்துகொள்ள அனுமதி வேண்டி 1959-ம் வருடத்திய இந்து சமய அறக் கட்டளைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் (22/1959) 34-வது பிரிவின்கீழ் செய்து கொண்ட மனு:—

நோட்டீஸ் மனு எண் 322/72 டி. 1
நாள் 24—8—1972

மேற்படி மனு குறித்து சென்னை 34, நுங்கம்பாக்கம், நெடுஞ்சாலையிலுள்ள தமது அலுவலகத்தில், இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித்துறை ஆணையாளர் அவர்களால் 28—10—1972 அன்று காலை 11-மணியளவில் விசாரணை நடத்தப்படும்.

2. மேற்படி மனு குறித்து கருத்துரைகளோ, மறுப்புரைகளோ எவையேனும் இருப்பின் அவற்றை எழுத்து மூலமாக 25—10—1972 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ இந்த அலுவலகத்திற்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்க வேண்டும்.

3. முறையீடுகள் எவையேனும் இருப்பின் அவற்றினை நேரிலும் விசாரணையின்போது தெரிவித்துக் கொள்ளலாம்.

கோ. நந்தகோபால்
ஆணையாளருக்காக.

தலைமைச்சர்

கலைஞர் கருணாநிதி

நிகழ்ச்சிகள்

காலை 9 மணி: பெரியநாய்க்கன் பாளையம் : (கோவை மாவட்டம்)—'மெட்ராஸ் ஆக்சிஜன் பிளான்ட்' நிகழ்ச்சி.

10-30 மணி: சிறுமுகை—மேட்டுப்பாளையம் ஸ்டேபின் பஞ்சாலை விரிவாக்கத் திட்ட அடிக்கல் நாட்டு விழா.

மாலை 4-30 மணி: கோவை—கண் சிகிச்சை முகாம் துவக்க விழா.

5-30 மணி: திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கக் கட்டிடத் திறப்பு.

இரவு 7-30 மணி: அவிநாசி—பொதுக்கூட்டம்.

செப். 25 காலை 9 மணி: வேலூர் (வ. ஆ. மாவட்டம்)—கண்சிகிச்சை முகாம் நிகழ்ச்சி.

வருவாய்த் துறை அமைச்சர்

ப. உ. சண்முகம்

நிகழ்ச்சிகள்

செப். 25 காலை 9 மணி: வேலூர்—கண் சிகிச்சை முகாமில் கலந்து கொள்ளல்; 10 மணி: நகராட்சி புதிய கடைகள் திறப்பு.

பொதுப்பணித் துறை அமைச்சர்

எஸ்.ஜே. சாதிக்பாட்சா

நிகழ்ச்சிகள்

செப். 24 முற்பகல் 11-மணி: உடுமலை—சார்நிலை நீதிமன்றம் திறப்பு விழாவில் கலந்துகொள்ளுதல்; மாலை: முதலமைச்சருடன் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளல்.

செப். 25: கோவை மாவட்டம்.

செப். 26: காலை 9 மணி: மதுரை இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் நீர்ப்பாசன-பெருவழித் துறை கருத்தரங்கில் கலந்து கொள்ளுதல்.

செப். 27: காலை 10-30 மணி: பொள்ளாச்சி — பரம்பிக்குளம் — ஆளியாறு திட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்ளுதல்.

செப். 28: காலை 10-30 மணி: பொள்ளாச்சி — பரம்பிக்குளம் — ஆளியாறு திட்டப் பகுதி ஆயக்கட்டு பிரச்சினைகள் பற்றிய விவாதத்தில் கலந்துகொள்ளுதல்.

இரவு 7-மணி: உடுமலை—அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவில் கலந்துகொள்ளுதல்.

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டத்திற்கு என் நன்றி.

"இதன் உதவியால் நானும் ஒரு நாள் டாக்டராவேன்!"

(தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டு விற்பனை மூலம் கிடைக்கும் வருவாய், கல்வி, மருத்துவம், வீட்டு வசதி போன்ற சமுதாய முன்னேற்றத்துக்கான பல்வேறு வழிகளில் பயன்படுத்தப்படுகிறது)

ரூ ஒரு லட்சம் பரிசு பெறலாம்

மொத்தப் பரிசுத் தொகை ரூ. 7,00,000

முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய் (ஒவ்வொரு வரிசைக்கும்)

குலுக்கல் நாள்: 30-9-1972

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை: ரூ. 1/- தான்

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2

விளம்பர வெளியீடு: இயக்குநர் செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.

2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

செலவு ஒரு ரூபாய்
வரவோ லட்ச ரூபாய்

தமிழ்நாட்டின் வறட்சி

ஆராய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு

சென்னை, செப். 23—

"தமிழ்நாட்டில் சில பகுதிகளில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலை பற்றி ஆராய்வதற்காகவும்—தேவையான முடிவுகளை மேற்கொள்வதற்காகவும் இத்திங்கள் 29-ம் நாள் சென்னையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு நடைபெறும்; எந்தெந்தப் பகுதிகளில் நிலைமை மோசமாக இருக்கிறது—என்னென்ன நடவடிக்கைகள் எடுப்பது என்பது பற்றியெல்லாம் இந்த மாநாட்டில் ஆராயப்படும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கேள்வி:— "வறட்சி நிவாரணத்துக்காக மத்திய அரசிடம் மாநில அரசு நிதியுதவி கோருமா?"

முதல்வர்:— "இதுபற்றி முடிவு செய்வதற்காகத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு நடைபெறுகிறது."

டில்லிக்குப் பதில் எழுதாததன் காரணம்

கேள்வி:— "மாநிலங்களுக்கு இடையேயுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பது பற்றிய குழு ஒன்றை அமைப்பது பற்றிக் கருத்துக் கேட்டதில் மற்ற மாநில அரசுகள் பதில் அனுப்பியிருக்கும் போது, தமிழ்நாட்டிலிருந்து மட்டும் பதில் அனுப்பப்படவில்லை என்று சொல்லப்படுகிறதே—ஏன்?"

முதல்வர்:— "மாநிலங்களுக்கு இடையே உள்ள பிரச்சினைகள் பற்றி மட்டும் அல்ல—மத்திய அரசு நியமித்த நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் சிபாரிசுகள் மீதும் மாநில அரசின் கருத்துக்களைக் கேட்டிருந்தார்கள்; மத்திய—மாநில உறவு பற்றி ஆராய்ந்த இராசமன்னார் குழு அறிக்கையின் சிபாரிசு விவரங்களை பரிசீலனை செய்யும்படி தலைமையமைச்சருக்கு நான் கடிதம் எழுதியதற்குப் பதில் கடிதமாக பிரதமர் எனக்கு எழுதிய கடிதத்தில் 'மத்திய அரசின் நிர்வாகச் சீர்திருத்தக் குழு அறிக்கையும் சேர்த்துப் பரிசீலிக்கப்படும்' என்று கூறியிருந்ததால், மாநிலங்களுக்கு இடையே பிரச்சினைகள் பற்றிய குழு அமைக்கும் கேள்விக்கு உடனடியாகப் பதில் எழுதவில்லை."

வேளாண்மைக் கல்லூரியில் பயிற்சி முறை

கேள்வி:—"கோவை வேளாண்மைக் கல்லூரியில் பயிற்சி முறைகளைத் திருத்தியமைப்பது பற்றி சில நிபந்தனைகளை மத்திய அரசின் வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் விதித்திருப்பதாகவும்—அந்த நிபந்தனைகளை நிறைவேற்றினால் ரூ. 2 கோடி தருவதாகவும் சொல்லப்படுகிறது; அதுபற்றி முடிவு எடுக்கப்பட்டு விட்டதா?

முதல்வர்:—"அது நீண்டநாளாக பரிசீலிக்கப்படுகிறது; விரைவில் முடிவு எடுக்கப்படும்."

ஆதாரமற்ற செய்திகளை வெளியிடும் ஏடுகள்மீது கடும் நடவடிக்கை

கொழும்பு, செப். 23—

"ஆதாரமின்றி வேண்டுமென்றே இழுக்கு ஏற்படும் வகையில் செய்திகளை வெளியிடும் பத்திரிகை ஆசிரியர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும்" என்று இலங்கைத் தலைமையமைச்சர் பண்டாரநாயகா அறிவித்திருக்கிறார்.

"அரசாங்க அதிகாரிகள் பலர் வெளிநாட்டுப் பாங்கிகளில் பெரும் பணம் சேமித்து வைத்துக்கொண்டுள்ளனர்" என்று, சில நாட்களுக்குமுன் பத்திரிகைகள் பலவும் இதற்கு முக்கியத்துவம் தந்து செய்திகளை வெளியிட்டிருந்தன.

"வெளிநாட்டுக் காண்டிராக்டர்கள் சிலர், சில அரசியல் கட்சிகளுக்கு இலஞ்சம் கொடுத்திருக்கின்றனர்" என்றும் அவைகள் செய்தி வெளியிட்டிருந்தனவாம்.

ஆனால், இந்தச் செய்திகள் எந்த ஆதாரத்தின்மீது தரப்பட்டன என்ற தகவலை அவைகள் தெரிவிக்கவில்லை; இதைக் குறிப்பிட்டே தலைமையமைச்சர் பண்டாரநாயகா, பத்திரிகை ஆசிரியர்களை எச்சரித்திருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் [illegible] இட்டு வெளியிடப்படுகிறது.

அண்ணா பிறந்த நாள் விழா பொதுக்கூட்டங்கள்

★

24-9-72

சென்னை முதல் வட்டம்

எம். ஜி. ஆர். நற்பணி மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு; தலைவர்: சே. அரசு; பேசுவோர்; மு. வேதாசலம் எம்.எல்.ஏ., புலவர் பொன்னிவளவன், பி.ஏ.என். இராசரத்தினம், ம. பொன்னுரங்கம், அன்புரோசு, கே. துரைராசு எம்.ஏ., இரா. மு. மனோகரன் எம்.சி., கா. இராசு. பு. நாகலிங்கம், மு. பாண்டியன். (டேம் இராசமாணிக்கம் குழுவின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்).

25-9-72

சென்னை 2-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு காசிமேடு செயின்ட் சேவியர் தெருவில்; தலைவர்: மு. தியாகராசன்; பேசுவோர்: திருப்பத்தூர் இராமமூர்த்தி, தோட்பூர் திருவேங்கடம், அ. செல்வராசன், மு. வேதாசலம் எம்.எல்.ஏ., பி. ஏ. என். இராசரத்தினம், த. சேதுராசன், கே.பி. பாண்டியன், சந்திரன், சாமுவேல்.